# தமிழக பேரிடர் மேலாண்மைக் கொள்கை

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

  **நோக்கம் :** ஒரு வலுவான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளைக் குறைத்தல், உயிரிழப்பு, பொதுச்சொத்துகள் (ம) உள்கட்டமைப்புகளின் சேதங்களை தவிர்த்தல்.

  **முக்கியத்துவங்கள்:**

- பேரிடர்களால் ஏற்படும் இறப்பு, பாதிப்புக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை, நலிந்த பிரிவினருக்கு ஏற்படும் பாதிப்பு, அடிப்படை சேவைகளின் பாதிப்பு, பொருளாதார இழப்பு ஆகியவற்றைக் குறைத்தல்.
- தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.
- வெள்ளம், சுனாமி, சூறாவளி, வறட்சி, வெப்பக்காற்று, நிலச்சரிவுகள், பூகம்பம், ரசாயன தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள், அணுமின் நிலையங்கள், கதிர்வீச்சுகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் பேரிடர் மேலாண்மை திட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.
- வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், குழந்தைகள், மூன்றாம் பாலினத்தவர் ஆகியோருக்கு பேரிடர் காலங்களில் அளிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு முன்னுரிமைகள் குறித்தும் பல்வேறு துறைகளின் பொறுப்பு (ம) பங்களிப்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

WINNER CHOICE IAS ACADEMY